☞ க.பொ.த உயர்தரம் - 2020

GEOGRAPHY
A L

புவியியல்

PAST PAPERS
CLASSES
2020..✍

புவியியல்-I
✍.வினா - 3/6

எஸ்.எஸ்.ஜீவன் (வினாத்தாள் திருத்துனர், பி.பரீட்சகர்- பரீட்சைதிணைக்களம்)
B.Ed (Hons) In Tamil, M.ED(EUSL), SLTS(2.II), IBSL (Trainer E.P), Dip In Eng

☞. GIS , GPS, RS

கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்

☞. கடந்தகால வினாக்கள்.

✍. G.C.E. (A/L) - 1997

-

✍. G.C.E. (A/L) - 2011

02).

1. செய்முறை புவியியலின் விருத்திக்கப் புதியபடவரைகலையியல் நுட்பங்கள் எந்தளவு பங்களித்துள்ளதென்பதனைச் சுருக்கமாக விளக்குக?

2. புவியியல் தகவல் முறைமையினை (GIS) உபயோகித்தப் படமொன்றினை அமைப்பதற்கு பயன்படுத்தப்படும் மூன்று பிரதான தரவு மூலாதாரங்களைப் பெயரிடுக?

3. மேலே (02) இல் உம்மால் பெயரிடப்பட்டமூலாதாரங்களுள் இரண்டினைத் தெரிவு செய்த பொருத்தமான உதாரணங்கள் தந்து ஒவ்வொன்றினையும் சிறு குறிப்பெழுதுக?

4. படங்களை அமைத்தல் மற்றம் தரவுப்பகுப்பாய்வு (GIS) நுட்பங்களை பயன்படுத்துவதினால் ஏற்படும் நன்மைகளை பரிசீலிக்குக?

✍. G.C.E. (A/L) - 2012

02).

1. புவியியல் தகவல் முறைமை (GIS) நுட்பங்கள் எவ்வாறு புதிய படவரைகலையியலின் விருத்திக்குப் பங்களிக்கின்றதென்பதை விளக்குக?

2. தொலையுணர்வு தொழில்நுட்பங்களின் மூலம் சேகரிக்கப்படும் மூன்று தரவு வகைகள் யாவை?

3. மேலே (02) இல் உம்மால் குறிப்பிடப்பட்ட தரவுகளை பயன்படுத்தி படங்களை அமைப்பதற்கு புவியியல் தகவல் முறைமை நுட்பத்தினை பிரியோகிப்பதனால் ஏற்படும் நன்மைகளை பரீசீலிக்குக?

✍. G.C.E. (A/L) - 2013

02).

1. படவரை கலையியலில் பயன்படுத்தப்பட்டுவரும் மூன்று நீன நுட்பமுறைகளைக் குறிப்பிடுக?

2. மேலே (01) ல்இல் குறிப்பிடப்பட்டவற்றுள் ஒரு நுட்பமுறையைத் தெரிவு செய்து படம் அமைப்பதில் அந்நுட்ப முறையின் மூன்ற நன்மைகளை சுருக்கமாகவிபரிக்குக?

3. கணினிகளை பயன்படுத்தி படம் அமைப்பதற்கான இரண்டு தரவு மூலாதாரங்களைப் பெயரிட்டு அவ்விரண்டு மூலாதாரங்களுக்கிடையிலான இரண்டு வேறுபாடுகளை விபரிக்குக?

✍. G.C.E. (A/L) - 2014

02).

1. செய்மதிப்படிமம் **(satellite image)** என்பதனால் கருதப்படுவது யாது எனச் சுருக்கமாகக் குற்ப்பிடுக?

2. செய்மதிப் படிமத்துக்கும் படமொன்றுக்கும் இடையில் காணப்படும் இரண்டு வேறுபாடுகளை விபரிக்குக?

3. புவியியல் தகவல் ஒழுங்கு **(GIS)** தொழில்நுட்பத்தை பயன்படுத்தி படங்களை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூன்று வகையான தரவு மூலாதாரங்களைப் பெயரிடுக?

4. வனா (03)ல் உம்மால் பெயரிடப்பட்ட மூன்று தரவு மூலாதாரங்களினதும் ஒவ்வொரு பண்பினை விபரிக்குக?

5. பூகோள நிலைப்படுத்தல் முறைமைத் தொழில்நுட்பத்தின் மூன்று பயன்பாடுகளை விபரிக்குக?

✍. G.C.E. (A/L) - 2015

02).

01. புவியியல் தகவல் முறைமை **(GIS)** ஒன்றில் பிரதான உள்ளடக்கக் கூறுகள் யாவை என்பதனை குறிப்பிடுக?

02. புவியியல் தகவல் முறைமையின் திறன்மிக்க பயன்பாட்டுக்கு அத்தியவசியமான மூன்று முக்கிய மூலகங்களை விளக்குக?

03. தரவு முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வில் புவியியல் தகவல் முறைமைத் தொழில்நுட்பத்தின் மூன்று நன்மைகளை விபரிக்குக?

04. நவீன படவரைகலையின் அண்மைக்கால விருத்தியில் இனங்காணக்கூடிய மூன்று முனைப்பான அம்சங்களை விபரிக்குக?

✍. G.C.E. (A/L) - 2016

02).

1. புவியியல் தகவல் முறைமை **(GIS)** என்பதனை வரையறை செய்க?

2. புவியியல் தகவல் முறைக்கும் மரபு ரீதியான படமாக்கல் முறைகளுக்கும் இரண்டு ஒற்றுமைகளைக்குறிப்பிடுக?

3. மரபு ரீதியான படமாக்கல் முறைமைகளுடன் ஒப்பிடும்போது புவியியல் தகவல் முறைமையில் காணப்படும் நான்கு கன்மைகளை சுருக்கமாக விபரிக்குக?

4. நவீன படவரைகலையின் மூன்று பயன்பாட்டு பிரியோகங்களைச் சுருக்கமாக ஆராய்க?

✍. G.C.E. (A/L) - 2017

02).

1. நவீன படவரைகலையியல் நுட்ப முறைகள் மூன்றினையும் பெயரிடுக?

2. மேலே உம்மால் பெயரிட்ட நவீன படவரைகலையியல் நுட்ப முறைகள் மூன்றிற்குமான வரைவிளக்கணங்களை சுருக்கமாகத் தருக?

3. மேலே (1) இல் பெயரிடப்பட்ட நவீன படவரைகலையியல் நுட்ப முறைகளில் ஏதாவது ஒன்றின் நன்மைகள் மூன்றினை சுருக்கமாக விவரிக்குக?

4. இலங்கையில் நவீன படவரைகலையியல் நுட்ப முறைகளின் பயன்பாடு தொடர்பில் காணப்படும் இரண்டு வரையறைகளைச் சுருக்கமாகக விளக்குக?

✍. G.C.E. (A/L) - 2018

02).

1. **பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை (GPS)** என்பதை வரையறைசெய்க?

2. **பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை** பிரதான கூறுகளை சுறுக்கமாக விளக்ககுக?

3. **பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை** தரவகளின் துல்லியமான தனமையினைக் பாதிக்கும் மூன்று காரணிகளை விபரிக்க?

4. **பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை** நான்கு நன்மைகளை அவற்றின் பணன்பாட்டின் அடிப்படையில் விளக்குக?

✍. G.C.E. (A/L) - 2019

03)

1.நவின படவரைக் கலை என்பதனை வரையறை செய்க?

2.புவியியல் தகவல் முறைமையின் (GIS) உள்ளிட்டு சாதங்களை பெயரிடுக?

3.பூகோள இடைநிலைப்படுத்தலின் நன்மைகளை விபரிக்க?

4.நவின படவரைக்கலையின் நன்மைகளை விபரிக்குக?

☞. எதிர்பார்க்கை வினாக்கள்.

✍. G.C.E. (A/L) - 2020

எதிர்பார்க்கை வினாக்கள்.

GPS ,RS, GIS, நவீன வரைபடக்கலை

03). (i) புவியியல் தகவல் முறைமையொன்றின் பிரதான கூறுகள் எவை? (02 புள்ளிகள்)

(ii) இடஞ்சார்ந்த மற்றும் இடஞ்சாரா தரவுகளிடையே காணப்படும் வேறுபாடுகளை தெளிவுபடுத்துக. (03 புள்ளிகள்)

(iii) **காவித் தரவுகள் மற்றும் பரவல் தரவுகள் என்பவற்றைப் புனையா வரைபடங்களைப் பயன்படுத்திச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)**

(iv) **புவியியல் தகவல் முறைமையொன்றின் காவித் தரவு மற்றும் பரவல் தரவு வடிவங்களின் இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதிகூலங்களையும் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)**

03).

1.தொலையுணர்வு தொழில்நுட்பங்களின் மூலம் சேகரிக்கப்படும் மூன்று தரவு வகைகள் யாவை?

2.நவீன படவரைகலையியல் நுட்ப முறைகள் மூன்றினையும் பெயரிடுக?

3.. **பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை (GPS)** என்பதை வரையறைசெய 1. படவரை கலையியலில் பயன்படுத்தப்பட்டுவரும் மூன்று நீன நுட்பமுறைகளைக் குறிப்பிடுக?

4. கணினிகளை பயன்படுத்தி படம் அமைப்பதற்கான இரண்டு தரவு மூலாதாரங்களைப் பெயரிட்டு அவ்விரண்டு மூலாதாரங்களுக்கிடையிலான இரண்டு வேறுபாடுகளை விபரிக்குக?

06).

1. செய்மதிப்படிமம் **(satellite image)** என்பதனால் கருதப்படுவது யாது எனச் சுருக்கமாகக் குற்ப்பிடுக?

2. செய்மதிப் படிமத்துக்கும் படமொன்றுக்கும் இடையில் காணப்படும் இரண்டு வேறுபாடுகளை விபரிக்குக?

3. புவியியல் தகவல் ஒழுங்கு **(GIS)** தொழில்நுட்பத்தை பயன்படுத்தி படங்களை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூன்று வகையான தரவு மூலாதாரங்களைப் பெயரிடுக?

4. வனா (03)ல் உம்மால் பெயரிடப்பட்ட மூன்று தரவு மூலாதாரங்களினதும் ஒவ்வொரு பண்பினை விபரிக்குக?

5. பூகோள நிலைப்படுத்தல் முறைமைத் தொழில்நுட்பத்தின் மூன்று பயன்பாடுகளை விபரிக்குக?

6. புவியியல் தகவல் முறைமையினை (**GIS)** உபயோகித்தப் படமொன்றினை அமைப்பதற்கு பயன்படுத்தப்படும் மூன்று பிரதான தரவு மூலாதாரங்களைப் பெயரிடுக?

7. படவரை கலையியலில் பயன்படுத்தப்பட்டுவரும் மூன்று நீன நுட்பமுறைகளைக் குறிப்பிடுக?

8. புவியியல் தகவல் ஒழுங்கு **(GIS)** தொழில்நுட்பத்தை பயன்படுத்தி படங்களை அமைப்பதற்குப்

எஸ்.எஸ்.ஜீவன்.

பயன்படுத்தப்படும் மூன்று வகையான தரவு மூலாதாரங்களைப் பெயரிடுக?

9. புவியியல் தகவல் முறைமை **(GIS)** ஒன்றில் பிரதான உள்ளடக்கக் கூறுகள் யாவை என்பதனை குறிப்பிடுக?

10. தரவு முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வில் புவியியல் தகவல் முறைமைத் தொழில்நுட்பத்தின் மூன்று நன்மைகளை விபரிக்குக?

11. நவீன படவரைகலையியல் நுட்ப முறைகள் மூன்றினையும் பெயரிடுக?

வினா –விடைகள்

01.தொலையுணர்வு தொழில்நுட்பம் என்றால் என்ன?

புவி மேற்பரப்பிற்கு மிகவும் தொலைவில் இருந்து புவியுடன் நேரடி தொடர்பில்லாமல் விமானம் மற்றும் செய்மதிகளின் மூலம் புவிமேற்பரப்பு அம்சங்களை அவதானித்தல் அவற்றுடன் தொடர்புபட்ட தகவல்களை சேகரித்தல் அவற்றை பதிவு செய்தல் செய்முறைப்படுத்தல் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அத்தகவல்களைப் பிரயோகித்தல் பற்றிய தொழிநுட்பமாகும்இ இது செய்மதியூடாக துல்லியமாகவும் தெளிவாகவும் நிலப்பகுதியை அளவிடுவதற்கும் அடையாளப்படுத்தவும் உதவும் தொகுதியாகவும் காணப்படுகின்றது.

முற்காலத்தில் படங்களை நிர்மாணிப்பதற்கு குறித்த இடத்திற்கு சென்று தேவையான தரவுகளைப் பெற்று அதற்கேற்ப படம் நிர்மானிக்கப்படும். எனினும் தொலையுணர்வு தொழில்நுட்பம் ஊடாக தொலைவானில்.. விண்வெளியில் நிறுத்தப்பட்ட உபகரணத்தினால் தரவுகள் சேகரிக்கரிக்கப்பட்டு படத் தயாரிப்பிற்கு அத்தரவுகள் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு செய்மதிகள் மூலம் சேகரிக்கப் படும் தவல்கள் தரைக்கட்டுப்பாட்டு நிலையதிற்கு எண்ணியக்கத் தரவுகளாக **(Digital data)** அனுப்பப்படும். அவை பின்னர் செய்மதிப்படிமங்களாக மாற்றப்படும்.

2.தொலையுணர்வின் அடிப்படை கூறுகள் மூலகங்களை தருக?

1. புவிமேற்பரப்பு அம்சங்கள் (நிலம் காடு கட்டிடம்)
2. சூரியன் (சக்தி மூலம் இமின்காந்தஅலை)
3. தொலையுணர்வு சாதனங்கள் (விமானமஇ கமரா)
4. புவிமேற்பரப்பு நிலையம் (தரைபட்டுப்பாட்டுப்பகுதி)
5. தரவுபகுப்பாய்வு முகாமைத்துவம்
6. பயனாளர்கள்

03.தொலையுணர்வு தொழில்நுட்பம் (RS) செயற்பாடுகளின் போது தரவு சேகரிப்பதற்கு பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. தொலையுணர்வின் மேடைகள் (**Sensing Platforms)**
2. வான் வழி ஒளிப்படத் தொழில்நுட்பம் **(Aerial Photographic Technology)**
3. செய்மதித் தொழில்நுட்பம (**Satellite Technology)**

04.புவியியல் தகவல் முறைமை (Geographical Information System) – GIS என்றால் என்ன?

- கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் என்பவற்றைப் பயன்படுத்தி நிலத்தின் இடரீதியாக தொடர்புபடும் தகவல்களை திறன் மிக்கதாகப் பெறுதல், தேக்கி வைத்தல், தேவைக்கேறப் இற்றைப் படுத்தல், கையாளுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் காட்சிப்படுத்தல் என்பவற்றுக்கா ஒழுங்கமைக்கப்பட்ட திரட்டு அம்சமே புவியியல் தகவல் முறைமை என அழைக்கப்படும்.

- 1999 இல் **ESRI** நிறுவனமானது தேசிய புவியியல் சமூகம் எனும் அமைப்புடன் இணைந்து முதன் முதலாக **GIS** தினத்தை நடாத்தியது. அந்த வகையில் **GIS** தினமானது வருடத்தில் நவம்பர் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் கொண்டாடப்படுகின்றது.

- **GIS** இன் வளர்ச்சியினை அவதானிக்கின்ற போது 1960 ஆம்ஆண்டின் முற்பகுதியில் அணு ஆயுத ஆராய்ச்சி உத்வேகம் பெற்றிருந்ததனால் ஏற்பட்ட கணனி வன்பொருள் வளர்ச்சிகள் படவரைகலையியலின் வளர்ச்சிக்கும் வித்திட்டது.

05.புவியியல் தகவல் முறைமையின் பிரதான கூறுகளை தருக?

1. கணினி வன்பொருள் **(Hardware)**
2. கணினி மென்பொருள் **(Software)**
3. தரவு **(Data)**
4. பயனிகள் **(User)**
5. முறைமைகள் **(Methods)**

07. GIS இன் தரவு மூலகங்களைத் தருக? அல்லது GIS தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி தகவலை ஒழுங்கமைப்பதற்குப் பயன்டும் தரவு மூலாதாரங்களைத் பெயரிடுக?

- ☐ படங்கள்
- ☐ செய்மதிப்படங்கள் (sattallte images)
- ☐ விமான ஒளிப்படங்கள் (Aerial photogrphs)
- ☐ தேசப்படங்கள் (surreyed map)
- ☐ GPS data
- ☐ எண்ணியல் உயர் மாதிரிகள் ;(DEM)
- ☐ தரவு அட்டவணைகள்

08.தொலையுணர்வு தொழில்நுட்பம் செயற்பாடுகளின் போது தரவு சேகரிப்பதற்கு பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

- ✓ தொலையுணர்வின் மேடைகள் (Sensing Platforms)
- ✓ வான் வழி ஒளிப்படத் தொழில்நுட்பம் (Aerial Photographic Technology)
- ✓ செய்மதித் தொழில்நுட்பம் (Satellite Technology)

1.தொலையுணர்வு மேடைகள் (Remote Sensing Platforms)

- தொலையுணர்வுச் செயன்முறைக்கு தேவையான உபகரணங்களைக் கொண்டு செல்லும் ஓடங்கள் இதில் குறிப்பிடப்படுகிறது.

- உணர்விகளும் அவை பொருத்தப்படும் மேடைகளும் மூன்று வகைப்படும்

✓ தரை மேற்பரப்பு மேடை (Ground based Platforms)
✓ வானவ்ழி மேடைகள் (Air borne Platforms)
✓ விண்வெளி மேடைகள் (Space borne Platforms)

2. வான்வழி ஒளிப்படங்கள் (Alrial Photography)

- விமானங்களின் கீழ் பாகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் நிழற்படக் கருவிகள் மூலம் புவியின் நிலவுருவக் காட்சிகள் படமாக எடுக்கப்படுகின்றன. இவையே வான்வழி ஒளிப்படங்கள் எனப்படும். தொலையுணர்வுத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முற்பட்ட தோற்றப்பாடாக இது உள்ளது.

- வான்வழி ஒளிப்படங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படும் அவை,
  1. செங்கத்தான் வான்வழி ஒளிப்படங்கள்
  2. சாய்வான வான்வழி ஒளிப்படங்கள்

09.நவீன பட வரைகலையியலின் தற்கால போக்குகளை விள்குக?

- வீன பட விஞ்ஞான வரைபு முறைமையின் அடிப்படையில் புவியியல் தகவல் முறைமை (GIS), தொலையுணர்வு தொழில் நுட்பம் (Remote Sensing) மற்றும் பூகோள இடநிலைப்படுத்தல் (GPS) முறைமை பிரதான பிரிவுகளை விளங்கிக் கொள்வதோடு அவற்றின் பயன்பாடு தொடர்பாகக் கற்பது இவ்வலகியலால் எதிர்பார்க்கப்படுகிறது.

- பட வரைபு (படமாக்கல்) முறையில் நவீன தொழில்நுட்ப முறைகளும் பயன்பாடும் தற்காலத் தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் அபிவிருத்தி பட விருத்தியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

- இத்துறைக்கேற்ப புதிய மென்பொருள்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டுள்ளதுடன் மென்மேலும் அவற்றின் விரைவான விருத்தியேற்படும்.

- கணினி மற்றும் புதிய மென்பொருள் பாவனையால் தற்காலத்தில் மிகச்சரியாக படங்கள் உருவாவதற்கும், புவியியல் விஞ்ஞான தரவுகள் மற்றும் தகவல்களை சேகரிப்பதற்கும் விவரிப்பதற்கும் முன்வைப்பதற்கும் இலகுவாகவுள்ளது. இதற்காக பயன்படுத்தப்படுகின்ற நவீன தொழில்நுட்ப முறைகள் மூன்றாகும். அவை,
  - **புவியியல் தகவல் முறைமை (Geographical Information System) - GIS**
  - **பூகோள இட நிலைப்படுத்தல் முறைமை (Global Positioning System) - GPS**
  - **தொலையுணர்வு தொழில்நுட்பம் (Remote Sensing) – RS**

10.GIS இன் பயன்பாடும் முக்கியத்துவமும் /நன்மைகள்

- படம் ஒன்றினுள் வெவ்வேறு தகவல்கள் ஒவ்வொரு கருப்பொருளைக் கொண்டு படத் தட்டுக்களாக களஞ்சியப்படுத்திக் கொள்ளல் மற்றும் மீண்டும் அவற்றைப் படைகளாக வெவ்வேறாக பரிசீலனை செய்ய முடியுமாதல்.
உதாரணம்: தரைத்தோற்ற படம் ஒன்றில் வீதித்தொகுதியை மட்டும் பிரிதொடுத்து கற்கமுடியும்.

- முப்பரிமாணப் படங்களின் தகவல்களை விமர்சனம் செய்ய முடிதல். GIS இல் உள்வாங்கப்படும் படங்கள் முப்பரிமாணப் படங்களாக பரிசீலணை செய்ய முடிதல். இது இரு பரிமாணப் படங்களை விட வினைத்திறனாக பல்வேறு விதங்களில் விமர்சனம் மேற்கொள்ள முடியுமாதல்.

- புவியியல் தகவல் தொகுதியில் இடஞ்சார் தரவுகள் மட்டுமன்றி இடஞ்சாரா தரவுகளையும் விளக்குவது விசேட பண்பாக கருத முடியும். உதாரணம்: ஏதாவதொரு பிரதேசத்தின் கிணறு மற்றும் அதன் பரவல் இடஞ்சார் தரவுகளாக அமைவதுடன் அவற்றிலுள்ள நீரின் தரம், அதன் ஆழம் போன்றன இடஞ்சாரா தரவுகளாகக் கருத முடியும்.

- குறுகிய காலத்தில் புவியியல் தரவுகளை இற்றைப்படுத்திக் (Update) கொள்ள முடியுமாகையால் எந்நேரமும் நவீன தகவல்களையும் பயன்படுத்த முடியுமாக இருத்தல்.

- புவியியல் தகவல் முறைமையில் காணப்படும் படங்களின் பூகோள தொகுதிக்கேற்ப களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளமையால் புவியியல் தரவுகளின் அமைவு, அளவுத்திட்டம், வகைக்குறிப்பின்னம் ஆகிய அம்சங்கள் மிகச் சரியாக பெறமுடிதல்.

- காவிப் படங்களை தயாரிக்கும் போது ஏற்படும் நபர் சார்ந்த தவறுகள் GIS படங்களில் குறைவதால் தவறின்றி வரையப்படுவதாலும் சரியான உண்மையான படங்களை பெற்றுக் கொள்ள முடியும்.
- அதிக அளவில் அமைந்த படங்களை தேக்கி வைத்தல் எடுத்துச் செல்லப் பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகள் இதில் மேலும் இலகுபடுத்தப்படுகிறது.

- புவியியல் தகவல் முறைமையில் காணப்படும் தரவு பல விடயங்களை ஒன்றிணைத்த வகையில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் புவியியல் விஞ்ஞானத்திற்கு மட்டுமன்றி சூழல், விவசாயம், பொறியியல் சமூகம் ஆகிய பல்வேறு பாடங்களுக்கும் பயன்படுத்த முடிதல்.

11.இலங்கையில் நவீன படவரைகலையியல் நுட்ப முறைகளின் பயன்பாடு தொடர்பில் காணப்படும் வரையரைகள்

- ஆரம்பச் செலவு அதிகமாக் காணப்படுதல் (GIS இல் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருள் 15 இலட்சம் ருபா வரை காணப்படல்)

- பயிற்றப்பட்ட அல்லது திறன் மிக்க தொழிலாளர்கள் குறைவாக காணப்படல்

- கிராமப் பகுதிகளில் பயன்படுத்துவது கடினம் (இணைய வசதி மற்றும் மின்சார வசதி குறைவாகக் காணப்படல்)
- தொழிநுட்பம் குறைவு
- இலங்கையில் முறையான தரவுத்தளம் காணப்படாமை

12.புவியியல் தகவல் முறைக்கும் (GIS) மரபு ரீதியான படமாக்கல் முறைக்கும் (இடவிளக்கவியல் படம்) இடையேயான ஒற்றுமைகள்

- புவியியல் தொடர்பான தகவல்களை தேக்கி வைக்கும் சாதனமாக இரண்டும் காணப்படுகின்றது.
- இரண்டு முறைகளும் இடம் சார்ந்த மற்றும் இடம் சாராத தகவல்களை கொண்டுள்ளது.
- யதார்த்த (உண்மை) உலகினை இரண்டும் பிரதிநிதிதுவப்படுத்தும்.
- ஒரேவகையான அம்சங்கள் இரண்டு முறைகளிலும் காணப்படுகின்றன (புள்ளி, கோட்டு வடிவம், பல்கோனிகள்) மரபு ரீதியான படமாக்கல் முறைகளுடன் ஒப்பிடும் போது புவியியல்

13.தகவல் முறையின் (GIS) நன்மைகள்

- இற்றைப்படுத்துவதும் கையாள்வதும் இலகுவானது.
- தேக்கி வைக்க குறைவான வெளி போதுமானது.
- செலவு மிகக் குறைவாகக் காணப்படும்
- படையாக்குதல் மேற்படிதல் வசதிகள் காணப்படல்
- அளவுத்திட்டத்திற்கு அமைய பெரிதாக்கும் சிறிதாக்கும் வசதிகள்